A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Website : www.tnerc.gov.in

**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 36 / 2020**

**BY RPAD**

திருமதி. A.M ஷமீன்பானு,
க/பெ. A.A. முபாரக் அலி,
கதவு எண். 84, ஜவஹர்பஜார்,
(TIPTOP), கரூர். ...மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு. K. G. கபீர் அஹமது)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ.கா/கரூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், 3 கோவை ரோடு,
கரூர் – 639 002.

2. உதவி செயற்பொறியாளர்/இ.கா/நகரியம்/கரூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், 3 கோவை ரோடு,
கரூர் – 639 002.

3. உதவி பொறியாளர்/இ.கா/நகரியம்/கரூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11KVSS வளாகம், கோவை ரோடு,
கரூர் – 639 002.

(திரு.A மொண்டி, உதவி செயற்பொறியாளர்/இ.கா/நகரியம்/கரூர்,
திரு.M.முருகன்/ உதவி பொறியாளர்/நகரியம்/வடக்கு/கரூர்)

**கேட்புரை நாள்: 05–11–2020**

**ஆணை நாள் : 10–02–2021**

03.08.2020 அன்று பெறப்பட்ட திருமதி. A.M ஷமீன்பானு, க/பெ. A.A. முபாரக் அலி, கதவு எண். 84, ஜவஹர்பஜார், (TIPTOP), கரூர் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 36/2020 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 05.11.2020 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்,

எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் 002–010–848–ல் மின்னளவி பழுது காரணமாக சராசரி மின் கட்டணம் விடுபட்ட தொகை ரூ.2,98,502/– ஐ தள்ளுபடி செய்யுமாறு விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் மின்னளவி பழுது காரணமாக சராசரி விடுபட்ட தொகை ரூ.2,98,502/– ஐ செலுத்துமாறு அறிக்கை பெறப்பட்டதாகவும், அறிவிப்புக்கு தேவையான ஆவணங்கள் சமர்பித்து தொகையை தள்ளுபடி செய்ய மனு சமர்ப்பித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 மேற்படி தொகையை மின் கட்டணத்துடன் வசூல் செய்ய பிரிவு அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தினால் மேல்முறையீட்டாளர் கரூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கரூர் மின் பகிர்மான வட்டம் 28.02.2020 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 மன்றத்தின் தீர்வு –**

கரூர் மின்பகிர்மான வட்டம் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 28.02.2020 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"நுகர்வோர் தனக்கு சொந்தமான கட்டிடத்திற்கு 45KW மின்திறனுடன் கூடிய வர்த்தக மின் இணைப்பை, மின் இணைப்பு எண் 002–010–848 பெற்றுள்ளார். இம்மின்இணைப்பில் உள்ள மின்னளவி பழுது அடைந்த காலம் எனக் குறிப்பிட்டு 05/2012 முதல்11/2013 வரையான கால*

*கட்டத்திற்கு சராசரி தொகையாக ரூ.**2.98,502/-**ஐ செலுத்தும்படி கடிதம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள காலகட்டங்களில் கட்டிடம் காலியாக இருந்தது என்றும், ஆகையால் சராசரி தொகையை ரத்து செய்யுமாறு குறி.பிட்டுள்ளார். மேலும் **01.04.2012** அன்று அவருடைய கட்டிடத்தில் கடை நடத்தி வந்த மகாராஜா சில்க்ஸ் உரிமையாளர் முற்றிலும் காலி செய்த காரணத்தினாலும், **10.05.2012** முதல் முற்றிலுமாக உபயோகம் இல்லாமல் இருந்ததினாலும் மாத பயனீட்டு அளவு குறைவாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் மனுதாரர் வாடகைக்கு கடை நடத்துவதற்கு வரும் போதும் காலி செய்து போகும் போதும் மின்சார வாரியத்திற்கு தெரிவிக்க வேண்டும். ஆனால் நுகர்வோரோ அல்லது அந்த கட்டிடத்தின் உரிமையாளரோ இது குறித்து மின் வாரியத்திற்கு ஏதும் தகவல் தெரிவிக்கவில்லை. வாடகை ஒப்பந்த பத்திரம் குறித்தும் ஏதும் பதிவு செய்யவில்லை. வாடகை ஒப்பந்த பத்திரம் சட்ட பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டதா? என்பது குறித்தும் மனுதாரர் ஆதாரங்களை மன்றத்தில் கொடுக்கவில்லை.*

*மேலும் அவர் வணிகக்கடையில் உள்ள மின்அளவி **19** மாதங்களுக்கும் மேலாக பயன்படுத்தாது இருந்த நிலையில் பழுதானது குறித்தும் மனுதாரர் வாரியத்திற்கு தெரிவிக்கவில்லை. மின் அளவியை பாதுகாக்கும் பொறுப்பு தமிழ்நாடு மின் ஒழுங்கு ஆணையவிதி **32(3)** – ல் நுகர்வோருக்கு உள்ளது என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மின் நுகர்வோர் அவரது பயன்பாட்டில் இருந்த மின் அளவி பழுது ஆனதை கவனிக்காமல் இருந்துள்ளார்.*

*மேற்கண்ட விவரங்களை ஆராய்ந்ததில் மனுதாரர் தற்போது நடத்தி வரும் வணிகக் கடை அவரது பாதுகாப்பில் உள்ள மின் அளவி, பயன்படுத்தாத போதும் பழுது அடைந்திருப்பதும் ஏற்கத்தக்கதாக இல்லை. மேலும் வாடகைதாரர் மின் பயன்பாடு இல்லாத காலங்களில் அவர் வியாபாரம் செய்யவில்லை என்பதற்கான ஆதாரங்களை (கொள்முதல் பில், GST வரி செலுத்திய விவரம், வாடகை செலுத்திய விவரம் போன்றவை) மன்றத்தில் கொடுக்க தவறியுள்ளார்.*

*எனவே வாடகைதாரர் மின் பயன்பாடு இல்லை என்று குறிப்பிட்டுள்ள காலங்களிலும் மின் பயன்பாடு செய்துள்ளதாக கருதப்படுகிறது. அவ்வாறு நடக்கவில்லை என்பதை வாடகைதாரர் நிரூபிக்க தவறியுள்ளதால் ஏற்கனவே ரூ. **2,98,502/-** வாரியத்திற்கு மின்கட்டணத்தொகையாக கட்ட வேண்டும் என்று வழங்கிய உத்திரவு உறுதி செய்யப்பட்டு தீர்வு காணப்படுகிறது.*

*எனவே வாடகைதாரர் மேற்கண்ட தொகையை உடனடியாக வாரியத்திற்கு செலுத்துமாறு உத்திரவிடப்படுகிறது.''*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

**4.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக **05.11.2020** அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

**4.2** மேல்முறையீட்டாளர் சார்பாக திரு. K. G. கபீர் அஹமது அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு.A மொண்டி, உதவி செயற்பொறியாளர்/இ.கா/நகரியம்/கரூர் மற்றும் திரு.M.முருகன்/ உதவி பொறியாளர்/நகரியம்/வடக்கு/கரூர், கரூர் மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. குறைதீர்மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர்மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட வாதங்கள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## 5.0 <u>Arguments of the Appellant :</u>

5.1 மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான வர்த்தகமின் இணைப்பு எண் 002–010–848 45 KW மின் திறனுடன் வழங்கப்பட்ட மின் இணைப்பு என்றும், மின்னளவி பழுது காரணமாக சராசரி மின் கட்டணம் விடுபட்ட தொகை ரூ.2,98,502/– 15 நாட்களுக்குள் செலுத்தும்படி அறிக்கை தரப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

5.2 மேற்படி அறிவிப்புக்கு தேவையான ஆவணங்கள் சமர்பிக்கப்பட்டதாகவும் மூன்று வருடம் கழித்து மேற்படி தொகை ரூ.2,98,502/– 30 நாட்களுக்குள் செலுத்தும்படி கடித வாயிலாக அறிக்கை தரப்பட்டதாகவும் அதற்கு ஏற்கனவே இது சம்பந்தமாக தள்ளுபடி செய்ய கடிதம் வழங்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேற்படி தொகையை மின் கட்டணத்துடன் வசூல் செய்ய பிரிவு அலுவலரால் நடவவக்கை எடுக்கப்பட்ட காரணத்தினால் தொகை சம்மந்தமாக தள்ளுபடி செய்யக்கோரி தலைவர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்/கரூர் அவர்களுக்கு மனு சமர்ப்பிக்கப்பட்டது என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 ஆரம்பத்தில் உரிமையாளர்கள் ஆகிய மேல்முறையீட்டாளர் சர்க்கார் டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ் நடத்தி வந்ததாகவும் மேற்படி கடையை காலி செய்த உடனே மகாராஜா சில்க்ஸ் வாடகைக்கு வந்த காரணத்தினால் (15.7.2008) வாடகைக்கு கடையை நடத்த வரும் போதும்

காலி செய்து போகும் பொழுதும் மின்சார வாரியத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்று மின்வாரிய அதிகாரிகள் தெரிவிக்காத காரணத்தினால் மேற்படி விபரத்தை மின் வாரியத்திற்கு தெரிவிக்கவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். வாடகை ஒப்பந்த பத்திரம் குறித்தும் ஏதும் பதிவு செய்யவில்லை எனவும் வாடகை ஒப்பந்த பத்திரத்திற்கு வாங்கப்பட்ட ரூ.20/– பத்திரம் அன்றைய தேதியிலேயே (12342/15.7.2008) STAMP VENDOR களிடமிருந்து பெறப்பட்டதாகவும் மேற்படி பத்திரத்தை வைத்தே, வாடகை ஒப்பந்த பத்திரம் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேற்படி மின் இணைப்பு உபயோகம் இல்லை என்று 6/2012 மாதத்தில் கரூர் அலுவலகத்தில் வழங்கப்பட்டதாகவும் மின் அளவி 19 மாதங்களுக்கு மேலாக பயன்படுத்தாது இருந்த நிலையில், பழுதானது குறித்தும் மனுதாரர் வாரியத்திற்கு தெரிவிக்கவில்லை என்றும், மின் அளவியை பாதுகாக்கும் பொறுப்பு தமிழ்நாடு மின் ஒழுங்குமுறை ஆணையவிதி 32(3)–ல் நுகர்வோருக்கு உள்ளது என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று தீர்ப்புரையில் கூறப்பட்டுள்ளதாகவும், தீர்ப்புரையில் கூறியது போல மின் நுகர்வோருக்கு பாதுகாக்கும் பொறுப்பு உள்ளது என்பதை ஏற்றுக்கொள்வதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். 19 மாதங்கள் மேற்படி மின் இணைப்பு உள்ள கட்டிடம் காலியாக இருந்ததாகவும், மேலும் மீட்டர் நல்ல நிலையில் இருந்தது என்றும் அவ்வாறு இருக்கும் பொழுது மீட்டர் பழுது என்று எவ்வாறு குறிப்பிடமுடியும் என்றும் மேலும் TIPTOP கம்பெனி வாடகைக்கு வந்த பிறகு மீட்டரில் சப்ளை வராதகாரணத்தினால் வாடகைதாரர் தெரிவித்த பிறகு அலுவலகத்தில் தெரிவித்துள்ளதாகவும், அதன்படி கரூர்/வடக்கு/நகரம் பிரிவு அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் நேரில் ஆய்வு செய்து மீட்டர் புகைந்து விட்டது என்றும், அதற்குரிய தொகை ரூ.8651/– செலுத்தி அன்றே மீட்டரும் மாற்றப்பட்டதாகவும் எனவே தான் தமிழ்நாடு மின் ஒழுங்குமுறை ஆணையவிதி 32(3)–ன் பிரகாரம் செயல்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 தீர்ப்புரையில் மின் அளவி, மின்சாரம் பயன்படுத்தாத போதும் பழுது அடைந்திருப்பதும் ஏற்கத்தக்கதாக இல்லை என்று குறிப்பிட்டுள்ளதற்கு மீட்டர் எரிந்து விட்டது என்றும், அதற்குரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது என்றும் Electronic Equipments எந்த நேரத்திலும் பழுதாகலாம் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மஹாராஜா சில்க்ஸ் உரிமையாளர்கள் காலி செய்துவிட்ட காரணத்தினால், கொள்முதல் பில் சமர்ப்பிக்க இயலவில்லை என்றும் 2012 வருட காலத்தில் GST வரி இல்லை என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மஹாராஜா சில்க்ஸ் உரிமையாளர்கள், வாடகை ஒப்பந்த பத்திரப்படி மேற்படி வாடகை ரூ.45,000/—ஐ அந்த இடத்தை வாடகைக்கு கொடுப்பவர்களுக்கு ரூ.15,000/— வீதம் மூன்று நபர்களுக்கு பிரித்து தொகையாக வழங்கி அவர்களுடைய Account—ல் வரவு வைக்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மஹாராஜா சில்க்ஸ் நிறுவனம் காலி செய்த பிறகு மேற்படி இடம் காலியாக இருந்ததாகவும் 1.4.2012 முதல் 31.8.2013 வரை வங்கி a/c லும் வாடகை வரவு வைக்கப்படவில்லை எனவும் அதன் பிறகு 9.9.2013 அன்று TIP TOP companyயிடம் வாடகை ஒப்பந்தம் போடப்பட்டு அதற்கு பெறப்பட்ட முன்தொகை கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 1.4.2012 முதல் 22.10.2013 வரை (அதாவது TIPTOP கம்பெனி ஆரம்பிக்கும் வரை) மேற்படி வளாகம் காலியாக இருந்த காரணத்தினாலும், அந்த பகுதிக்கு மின் கணக்கு எடுக்கவரும் ஊழியர்கள் கடை காலியாக இருந்த காரணத்தினால் ரீடிங்பதியும் consumer ledger—ல் “not in use” என்று பதிந்த காரணத்தினாலும், பதிவு செய்யாத வாடகை ஒப்பந்த பத்திரம் உண்மையான ஒப்பந்தம் என்ற காரணத்தினாலும், வாடகை ரசீதிற்கு பதிலாக மேற்படி கட்டிட வாடகை bank account-ல் தொகையாக வரவு வைக்கப்பட்ட காரணத்தினாலும் மேற்படி காலங்களில் (1.4.2012 முதல் 22.10.2013) வரை மேற்படி வளாகம் காலியாக இருந்தது என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரர்களின் பதிலுரை:</u>**

6.1 உதவி மின்பொறியாளர்/இகா/நகரம்/வடக்கு/கரூர் அலுவலகத்திற்குட்பட்ட திருமதி. ஷமீனாபானு அவர்களின் மின் இணைப்பு எண் 002—010—848—TF V—ல் கடந்த 05/2012 முதல் 11/2013 வரை உண்டான காலத்தில் மீட்டர் புகைந்துவிட்ட காரணத்திற்காக தணிக்கைத்துறையில் விதிக்கப்பட்ட சராசரி தொகையாக ரூ.2,98,502/— தொகையினை செலுத்துமாறு நுகர்வோருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. இக்கடிதத்தை பெற்றுக்கொண்டு நுகர்வோர் உதவி மின்பொறியாளர் அலுவலகம் வந்து தேவையான விவரங்களை தெரிந்து கொண்டு சென்றுள்ளார். மேலும் திருமதி.ஷமீனாபானு,

க/பெ.A.A.முபாரக் அலி அவர்கள் விதிக்கப்பட்ட சராசரி தொகையை ரத்து செய்து தருமாறு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனு செய்திருந்தார்.

**6.2** மேற்படி மின் இணைப்பில் மீட்டர் பழுதடைந்த காலமான 05/2012 முதல் 11/2013 வரை ஒவ்வொரு மாதமும் குறைந்த பட்ச மாதாந்திர கட்டணம் மட்டுமே செலுத்தியுள்ளார்கள். மேலும் மேற்படி மின் இணைப்பில் கடை காலியாக உள்ளது என்றும் உபயோகம் இல்லை என மனுதாரர் தெரிவித்துள்ளார். ஆனால் அதற்குண்டாக எந்த விதமான ஆவணங்களையும் மனுதாரர் இணைக்கவில்லை. இது தொடர்பாக எந்தவித கடிதமும் அலுவலகத்தில் கொடுக்கப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

**6.3** தணிக்கைத்துறையில் விதிக்கப்பட்ட சராசரி தொகை சரியானது என்பதால் மேற்கண்ட மின் இணைப்பு எண் 002–010–848, TF V–ல் மீட்டர் பழுதான காலமான 05/2012 முதல் 11/2013 வரை காலத்திற்கான விடுப்பட்ட சராசரி தொகையினை ரூ.2,98,502/– யை மின் நுகர்வோரிடம் இருந்து வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0** **<u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>**

**7.1** மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோருடைய வாதங்கள் மற்றும் கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்கள் ஆகிவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

**7.2** மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில் தனக்குச் சொந்தமான கட்டிடத்தில் 45 KW மின்திறனுடன் வர்த்தக மின் இணைப்பு எண் 002–010–848 பெற்று டிபார்ட்மெண்ட் ஸ்டோர் நடத்தி வந்ததாகவும், வியாபாரம் சரிவர நடக்காத காரணத்தினால் 15.07.2008 முதல் “மகாராஜா சில்க்ஸ்” உரிமையாளர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டதாக தெரிவித்துள்ளார். தொழில் சரிவர நடக்காத காரணத்தினால் மகாராஜா சில்க் உரிமையாளர்களும் 01.02.2012 முதல் சிறுக சிறுக காலி செய்து 01.04.2012 அன்று முற்றிலும் கடையை காலி செய்துவிட்டதாகவும், அதனால் தான் 5/2012 மாத பயனீட்டு அளவு குறைவாக வந்துள்ளதாகவும் மற்றும் 10.05.2012–க்கு பிறகு பயனீட்டளவு ‘NIL’ என வந்துள்ளதாக தெரிவித்துள்ளார். கடை காலியாக இருந்த விபரம் அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டதாகவும், ரீடிங் எடுக்க வந்த ஊழியர்களுக்கும் நன்றாக தெரியுமென்றும், அதனால்தான் ரீடிங் பதிவு செய்யும் பொழுது “Not in use” என்று பதியப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

7.3 மேலும், மேற்படி கட்டிடத்தை "டிப்–டாப்" கம்பெனி நடத்துவதற்கு 09.09.2013–ல் ஒப்பந்தம் செய்யப்பட்டதாகவும், மேற்படி வியாபாரிகள் கட்டிடத்தில் சில மாற்றங்கள் செய்து 23.10.2013 முதல் தொழில் நடத்தி வருவதாகவும், மகாராஜா சில்க்ஸ் காலி செய்த பின் TIP-TOP கம்பெனி வரும் வரை கடை காலியாகத் தான் இருந்தது என்று தெரிவித்துள்ளார். 23.10.2013 அன்று மின்சாரம் வராத காரணத்தினால் வாடகைதாரர்கள் கூறிய பிறகு அலுவலகத்தில் தெரியவந்ததாகவும், மின்வாரிய பணியாளர்கள் ஆய்வு செய்து மீட்டர் எரிந்துவிட்டதாக தெரிவித்ததனால் அதற்குரிய தொகை ரூ.8651/– செலுத்தி அன்றே புதிய மீட்டர் பொறுத்தப்பட்டு 23.10.2013 முதல் TIP-TOP கம்பெனி இயங்கி வருவதாக தெரிவித்துள்ளார். தணிக்கை குழுவினர் குறிப்பிட்டது போல் 5/12 முதல் 9/2013 வரை மீட்டர் பழுது கிடையாது என்றும், நன்றாக இருந்ததாகவும், 09.09.2013 முதல் மராமத்து பணி செய்யும் பொழுது மின்சாரம் இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

7.4 மேலும், 01.04.2012 முதல் 09.09.2013 வரை கடை காலியாக இருந்ததாலும், இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கணக்கெடுக்கும் பணியாளர்கள் கடை பூட்டியிருந்ததால் "Not in use" என்று நுகர்வோர் பேரேட்டில் பதிந்துள்ளதாலும், DC & RC செய்த பணியாளர்களுக்கும் கடை காலியாக இருந்த விபரம் தெரியுமென்றும், electronic meter நின்று, நின்று ஓடுவதற்கு வாய்ப்பில்லையென்பதால் சராசரி தொகையை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார். இதுசம்பந்தமாக மேல்முறையீட்டாளர் வாடகைதாரரிடம் இருந்து வாடகை பெற்றதற்கான வங்கி பரிவர்த்தனை மற்றும் Commercial Tax Registration (TIN) நகல் ஆகிவற்றை தான் மேற்குறிப்பிட்ட காலங்களில் கடை காலியாக இருந்ததற்கான ஆவணங்களாக சமர்ப்பித்துள்ளார்.

7.5 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் மின் இணைப்பு எண் 002–010–848 TF V-ல் கடந்த 5/2012 முதல் 11/2013 வரையிலான காலத்தில் மின்அளவி புகைந்துவிட்ட காரணத்திற்காக தணிக்கைத் துறையால் விதிக்கப்பட்ட தொகை ரூ.2,98,502/–ஐ செலுத்துமாறு மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மின் அளவி பழுதடைந்த காலமான 5/2012 முதல் 11/2013 வரை ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச கட்டணம் மட்டுமே மேல்முறையீட்டாளர் செலுத்தியுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் கடை காலியாக இருந்தது என்றும், உபயோகம் இல்லையெனவும் தெரிவிக்கும் மேல்முறையீட்டாளர் அதற்குண்டான எந்த விதமான

ஆவணங்களையோ அல்லது கடிதமோ சமர்ப்பிக்கவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். எனவே மேற்கண்ட மின் இணைப்பு எண் 002–010–848 TF V-ல் மின் அளவி பழுதான காலமான 5/2012 முதல் 11/2013 வரையிலான காலத்திற்கான விடுபட்ட சராசரி தொகை ரூ.2,98,502–ஐ மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டுமென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 இந்த வழக்கில் மின்னளவி பழுது என்பதற்கு பரிசோதனை அறிக்கை எதுவும் இல்லை. மேலும், பதிவு இறக்கம் செய்யப்பட்ட தகவல்களும் இல்லை. மேற்கண்ட நிலையில் நான் 5/2012 முதல் 11/2013 வரையிலான காலத்தில் நுகர்வோர் பேரேட்டில் செய்யப்பட்டுள்ள பதிவுகளை ஆராய விரும்புகிறேன். அதன்படி 10.05.2012 அன்று மின்கணக்கீடு செய்தபொழுது 1368 யூனிட்கள் என்றும், அதன்பிறகு 07/2012 கணக்கீட்டு காலத்தில் மின் அளவீடு (reading) பதிவில் Not in use என்றும், 09/2012 மற்றும் 11/2012 ஆகிய மின் அளவீட்டு காலங்களில் Normal பதிவும், அதன்பிறகு 01/2013 முதல் 09/2013 வரை அதாவது 08.09.2013 வரை உள்ள மின் அளவீட்டு காலங்களில் Not in use என்ற பதிவும் உரிமதாரரின் பணியாளரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

7.7 மேலும் நுகர்வோர் பேரேட்டில் செய்யப்பட்டுள்ள பதிவின்படி மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பு 10.07.2013 அன்று மின்துண்டிப்பு செய்யப்பட்டு 05.08.2013 அன்று மறு இணைப்பு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு 23.10.2013 அன்று மின்னளவி எரிந்துவிட்டது என்று மேல்முறையீட்டு புகார் தெரிவித்ததின்பேரில் எதிர்மனுதாரரால் ஆய்வுசெய்யப்பட்டு அன்றைய தினமே புதிய மின்னளவி மாற்றப்பட்டதாக வாதுரையின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில் 09.09.2013 முதல் மராமத்து பணி செய்யும் பொழுது மின்சாரம் இருந்ததாக தெரிவித்துள்ளார்.

7.8 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பு 10.07.2013 அன்று மின்துண்டிப்பு செய்யப்பட்டு 05.08.2013 அன்று மறு இணைப்பு செய்யப்பட்டுள்ளதால் அந்த காலகட்டத்தில் மின்னளவி நல்ல நிலையில் இருந்ததாக கருதவேண்டியுள்ளது. மேலும் மேல்முறையீட்டாளர் 09.09.2013 முதல் மராமத்து பணி செய்யும் பொழுது மின்சாரம் இருந்ததாக தெரிவித்துள்ள நிலையில் 23.10.2013–ற்கு முன்புவரை மின்னளவி பழுதில்லை என அறியப்படுகிறது. மேலும் மின்னளவி பழுது என கூறும் எதிர்மனுதாரர்தான் மின்னளவி பழுது என்பதற்கான பரிசோதனை அறிக்கை அல்லது (CMRI) மூலம் பதிவு இறக்கம் செய்யப்பட்ட தகவல்களை

கொண்டு மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பில் உள்ள மின்னளவியின் பழுதை நிரூபிக்க கடமைபட்டவர் ஆவார். மேலும் அவ்வாறு அறிவியில் பூர்வமாக நிரூபிப்பதற்கான வழிவகை இருந்தும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் மேல்முறையீட்டாளரிடம் ஆதாரங்களை சமர்பிக்க கோருவது மிகுந்த வேதனையளிக்ககூடியதான வாதுரையாக நான் கருதுகிறேன்.

7.9 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி மின் இணைப்பு எண் 002–010–848 -ல் உள்ள மின் அளவி 5/2012 முதல் 09/2013 (08.09.2013)வரை மின்னளவி பழுதில்லை என தீர்வுசெய்யப்படுகிறது. அதன்பிறகு மேல்முறையீட்டாளர் புகார் 23.10.2013 அன்று மின்னளவி எரிந்து விட்டதாக புகார் அளித்ததின் அடிப்படையில் அன்றே புதிய மின்னளவி பொருத்தப்பட்டுள்ளது. மேலும் மேல்முறையீட்டாளர் 09.09.2013 முதல் மராமத்து பணி செய்யும் பொழுது மின்சாரம் இருந்ததாக தெரிவித்திருந்தாலும் அதன்பிறகு எப்பொழுது மின்னளவி எரிந்தது என்பதற்கான ஆதாரமில்லை. எனவே, 09.09.2013 முதல் மின்னளவி மாற்றப்பட்ட 23.10.2013 வரை மின்னளவி பழுதான காலமாக கருதி அந்த காலத்திற்குண்டான சராசரி தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்தவேண்டும் என தீர்வு செய்யப்படுகிறது. மேலும் எதிர்மனுதாரர்கள் கீழ்க்கண்ட நடைமுறைகளை பின்பற்றுமாறு ஆணையிடப்படுகிறது.

1) 05/2012 முதல் கணக்கீடு செய்து வழங்கிய சராசரி கேட்புத்தொகையை மறுகணக்கீடு செய்து 09.09.2013 முதல் மின்னளவி மாற்றப்பட்ட 23.10.2013 வரை உள்ள காலங்களுக்கான புதிய கேட்பு அறிவிக்கையை மேல்முறையீட்டாளருக்கு சார்பு செய்யவேண்டும்.
2) மின்னளவி பழுதான காலகட்டத்தில் மேல்முறையீட்டாளரின் வளாகத்தில் புதிய வாடகைதாரர் வந்துவிட்டதாலும், அவருடைய பயன்பாடு அதற்கு முந்தைய வாடகைதாரரிடமிருந்து வேறுபட்டுள்ளதாலும் எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்வழங்கல் விதி 11(4)–ன்படி மேற்கண்ட காலத்திற்கு சராசரி குறைவுத்தொகை கணக்கிட வேண்டும்.
3) மேலும் மறுகணக்கீட்டின்படி மேல்முறையீட்டளருக்கு திரும்பவழங்க வேண்டிய தொகை ஏதேனும் இருந்தால் மேற்கண்ட மின்இணைப்பின் வருங்கால மின்கட்டணங்களில் சரி செய்யவேண்டும்.

**8.0 <u>முடிவுரை</u>**

8.1 பத்தி 7–ல் உள்ள தீர்வுகளின்படி மின் இணைப்பு எண் 002–010–848 -ல் உள்ள மின் அளவி 5/2012 முதல் 09/2013 (08.09.2013)வரை மின்னளவி பழுதில்லை என தீர்வுசெய்யப்படுகிறது. அதன்பிறகு மேல்முறையீட்டாளர் புகார் 23.10.2013 அன்று மின்னளவி எரிந்து விட்டதாக புகார் அளித்ததின் அடிப்படையில் அன்றே புதிய மின்னளவி பொருத்தப்பட்டுள்ளது. மேலும் மேல்முறையீட்டாளர் 09.09.2013 முதல் மராமத்து பணி செய்யும் பொழுது மின்சாரம் இருந்ததாக தெரிவித்திருந்தாலும் அதன்பிறகு எப்பொழுது மின்னளவி எரிந்தது என்பதற்கான ஆதாரமில்லை. எனவே, 09.09.2013 முதல் மின்னளவி மாற்றப்பட்ட 23.10.2013 வரை மின்னளவி பழுதான காலமாக கருதி அந்த காலத்திற்குண்டான சராசரி தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்தவேண்டும் என தீர்வு செய்யப்படுகிறது. மேலும் எதிர்மனுதாரர்கள் கீழ்க்கண்ட நடைமுறைகளை பின்பற்றுமாறு ஆணையிடப்படுகிறது.

1) 05/2012 முதல் கணக்கீடு செய்து வழங்கிய சராசரி கேட்புத்தொகையை மறுகணக்கீடு செய்து 09.09.2013 முதல் மின்னளவி மாற்றப்பட்ட 23.10.2013 வரை உள்ள காலங்களுக்கான புதிய கேட்பு அறிவிக்கையை மேல்முறையீட்டாளருக்கு சார்பு செய்யவேண்டும்.
2) மின்னளவி பழுதான காலகட்டத்தில் மேல்முறையீட்டாளரின் வளாகத்தில் புதிய வாடகைதாரர் வந்துவிட்டதாலும், அவருடைய பயன்பாடு அதற்கு முந்தைய வாடகைதாரரிடமிருந்து வேறுபட்டுள்ளதாலும் எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்வழங்கல் விதி 11(4)–ன்படி மேற்கண்ட காலத்திற்கு சராசரி குறைவுத்தொகை கணக்கிட வேண்டும்.
3) மேலும் மறுகணக்கீட்டின்படி மேல்முறையீட்டளருக்கு திரும்பவழங்க வேண்டிய தொகை ஏதேனும் இருந்தால் மேற்கண்ட மின்இணைப்பின் வருங்கால மின்கட்டணங்களில் சரி செய்யவேண்டும்.

8.2 மேற்கண்ட தீர்வை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவு இடப்படுகிறது.

8.3 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண்.36/2020 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1) திருமதி. A.M ஷமீன்பானு,
க/பெ. A.A. முபாரக் அலி,
கதவு எண். 84, ஜவஹர்பஜார்,
(TIPTOP), கரூர்.

2) செயற்பொறியாளர்/இ.கா/கரூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், 3 கோவை ரோடு,
கரூர் – 639 002.

3) உதவி செயற்பொறியாளர்/இ.கா/நகரியம்/கரூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், 3 கோவை ரோடு,
கரூர் – 639 002.

4) உதவி பொறியாளர்/இ.கா/நகரியம்/கரூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11KVSS வளாகம், கோவை ரோடு,
கரூர் – 639 002.

5) மேற்பார்வை பொறியாளர், – By Mail
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், எண். 3, கோவை ரோடு,
கரூர் – 639 002.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Mail
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7) செயலாளர், – By Mail
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8) உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.